**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF DISTRICT MUNSIF COURT, SHENCOTTAI**
**CC No. 203/2018**

Deposition of the witness for Prosecution **PW6**

| | | |
|---|---|---|
| Name | : | **வின்செண்ட் அன்பரசி** |
| Husband Name | : | **சுரேஷ்குமார்** |
| Age | : | **49** |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (23.07.2026)

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். சம்பவத்தின்போது புளியரை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 24.05.2017 மாலை 5 மணிக்கு சிறப்பு ஆய்வாளர் அலெக்ஸ் மேனன் என்பவர் நிலையம் வந்து ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.98/2017 , இதச பிரிவுகள் 294(பி), 353, 506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்து, முதல்தகவல்அறிக்கையை செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து, மற்றொரு நகலை என்னிடம் விசாரணைக்காக வைத்தபோது, நான் அதை விசாரணைக்காக எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடத்திற்கு காலை 6

மணிக்கு சென்று சாட்சிகள் குமார், ராமசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி மாதிரிவரைபடம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வைமகஜரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் அன்றைய தினமே சாட்சிகள் அலெக்ஸ்மேனன், நிவின் பால்ராஜ், தலைமை காவலர் ராஜாசிங்கை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் 15 மணியளவில் தாட்கோ நகர் பிள்ளையார் கோவிலில் வைத்து எதிரிகள் ஹரிஹரன், முருகேசன் ஆகியோர்களை கைது செய்து, உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி நிலையம் கொண்டு வந்து, தேக பரிசோதனை செய்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து எதிரிகளை இருநபர் ஜாமீனில் பிணையில் விடுவித்தேன். 31.05.2017 அன்று எதிரிகள் ஆறுமுகராஜ், கண்ணன் என்ற கனியப்பா ஆகியோர்கள் திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் இந்த வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது அன்றைய தினம் இதச பிரிவுகள் 294(பி), 353, 506(2) ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. அரசியலில் யார் பெரிய ஆள் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் எதிரிகள் 4 பேரும் சொன்னதாக தான் துலங்குகிறது. குறிப்பாக எந்த எதிரி என்ன சொன்னார் என்று துலங்குமா என்றால் துலங்காது.

2. காவலர்கள் எந்தெந்த வாகனத்தில் எப்போது ரோந்து சென்றார்கள் என்று எங்கள் விசாரணையில் துலங்காது என்றால் வாகனத்தின் சென்றது துலங்காது, எப்போது சென்றார்கள் என்று துலங்கும். பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும் காவலர்கள் General Diary ல் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. பொதுவாக இரவு ரோந்து பணிக்கும் செல்லும் காவலர்கள் அங்குள்ள பீட் புத்தகத்தில் கையெழுத்து செய்வார்கள் என்றால் சரிதான். நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மீது குடித்துவிட்டு வாகனம் ஓட்டிதற்காக தாக்கல் செய்தேனா என்றால் அதற்கு முந்தைய நாள் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், அவர் பெயர் ஆறுமுகராஜ், அவர் இறந்துவிட்டார்.

4. பொதுவாக ஊனமுற்ற நபர் 3 நபர்களை தாக்கிவிட்டு செல்வது சாத்தியமில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரி ஊனமுற்றவர் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

5. என்னிடம் கொடுத்த தனிஅறிக்கை கையால் எழுதப்பட்டதா அல்லது கணினியில் அச்சடிக்கப்பட்டதா என்றால் கணினியில் அச்சடிக்கப்பட்டது. அது எங்களது காவல்நிலைய கணினியில் அச்சடிக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவஇடம் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி என்றால் சரிதான்.

6. எதிரிகள் எந்தெந்த அசிங்கமான வார்த்தைகளை உபயோகித்தார்கள் என்று எனது விசாரணையில் துலங்காது என்றால் சரியல்ல, துலங்கும்.

7. ரோந்து சென்ற காவலர்களுக்கு எதிரிகளால் எந்த பணித்தடங்கலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

8. காவலர்களை தாக்கிய எதிரிகளை கைது செய்யாமல் நான் ஏன் பிணையில் விட்டேன் என்றால் குற்றவியில் நடைமுறைச்சட்டம் பிரிவு 41 ஏ–ன் கீழ் குற்றங்கள் 7 ஆண்டுகளுக்கு குறைவாக இருந்ததால் பிணையில் விட்டேன். எதிரிகள் எந்த குற்ற செயலும் ஈடுபடாததால் பிணையில் விட்டேன் என்றால் சரியல்ல.

9. இந்த வழக்கில் 2 மாதிரி வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, 1 மாதிரிவரைபடம் தான் தாக்கல் செய்தேன். சம்பவஇடம் 2 மாதிரி வரைபடங்களிலும் வெவ்வேறாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

10. அலெக்ஸ்மேனனின் பிரிவு 161 ன் கீழான வாக்குமூலத்தில் அவர் எதிரிகள் கண்ணன் என்ற கனியப்பாவும், ஆறுமுகராஜம் அவரது சட்டையை இழுத்து, அதை தட்டிக்கேட்ட பயிற்சி சார்பு ஆய்வாளரை ஆறுமுகராஜ் காலரை இழுத்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

11. அதைபோல் பயிற்சி சார்பு ஆய்வாளர் பிரிவு 161ன் கீழான வாக்குமூலத்தில் எதிரிகள் கண்ணன் என்ற கனியப்பாவும், ஆறுமுகராஜம் எனது சட்டையை பிடித்து இழுத்தும், அதை தட்டிக்கேட்ட பயிற்சி சார்பு ஆய்வாளரை ஆறுமுகராஜ் காலரை இழுத்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

12. மேலும் ராஜாசிங் பிரிவு 161ன் கீழான வாக்குமூலத்தில் எதிரிகள் கண்ணன் என்ற கனியப்பாவும், ஆறுமுகராஜம் எனது சட்டையை பிடித்து இழுத்தும், அதை தட்டிக்கேட்ட பயிற்சி சார்பு ஆய்வாளரை ஆறுமுகராஜ் காலரை இழுத்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

13. நான் யாரையும் விசாரிக்காததால்தான் மேற்படி வாக்குமூலங்கள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/– K.N. குரு
மாவட்ட உரிமையியல் நீதிபதி
செங்கோட்டை